**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: DVOP. 1/2025**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தமிழ்செல்வி | Caste | : |
| Father Name | : க/பெ.பாப்புராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(04.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். எனக்கும் 1ம்எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், திருமண புகைப்படம் அசல் ம.சா.ஆ.2 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிடப்படுகிறது) ம.சா.ஆ.3 ஆகவும், 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் அசல் ம.சா.ஆ.4 ஆகவும், 1ம் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் குடும்பத்தின் மீது கொடுத்த புகார் மனுவுக்கு புகார் ஏற்பு சான்றிதழ் நகல் (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ம.சா.ஆ.5 ஆகவும், மனுதாரரை 1ம்எதிர்மனுதாரர் மற்றும் குடும்பத்தினர் தாக்கியதில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான மருத்துவ குறிப்புகள் நகல் (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ம.சா.ஆ.6 ஆகவும், திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.8 ஆகவும், 1ம் மனுதாரரின்

வங்கி புத்தகம் அசல் ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.